FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM

C

1. District மாவட்டம்: Nilgiris    PS காவல்நிலையம்: V & AC, Ooty    Year ஆண்டு: 2019    FIR No மு.த.அ. எண்: 7/19    Date நாள்: 24.06.2019

2. (i) Act சட்டம்: PC (Amendment) Act, 2018    Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from நாள் முதல்: 08.06.19    Date to நாள் வரை: 24.06.2019

Time Period நேர அளவு :    Time from நேரம் முதல் :    Time to நேரம் வரை : --

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்    Time நேரம் : 24.06.2019

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்    Time நேரம் : 09.00 a.m.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக    Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்    East, about 25 kms.

Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. C. Hariharan    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் C. K. Chinnasamy

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 74/2019    (d) Nationality : நாட்டினம் Indian    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Agriculture    (g) Address : முகவரி 4/6 Kenkarai Village, Kotagiri Taluk, The Nilgiris District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) Tr. Muthupandi, Inspector of Plantation, Kambai Kadai, Kotagiri.

2) Tr. Mani, Office Assistant, O/o the Inspector of Plantation, Kambai Kadai, Kotagiri.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— No Delay —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

SEPARATE SHEET ENCLOSED.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb ~~Impression of the~~ Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station 24/6/19
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 24.06.2019.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் பி. கீதாலட்சுமி
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் ஆய்வாளர்
உ.த.க.மா்வு, நீலகிரி மாவட்டம்.

**உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.7/2019/AC/NI u/s 7 (a) of Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் விவரம்;-**

24.06.2019-ம் தேதி திங்கட்கிழமை காலை 09.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது நீலகிரி மாவட்டம், கோத்தகிரி தாலுக்கா, கெங்கரை கிராமம், கதவு எண்.4/6, சி.கே.சின்னசாமி மகன் கே.சி.ஹரிஹரன் என்பவர் கணினியில் தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகார் மனு மற்றும் அதனுடன் ஒரு CD ஆகியவைகளை என்னிடம் ஆஜர் செய்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்தேன். புகார் சம்மந்தமாக ரகசிய விசாரணையும் மேற்கொண்டேன். அந்த புகாரின் அடிப்படையில் எதிரிகளின் நற்பெயர் குறித்தும் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரிகளின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகாரில் சொல்லப்பட்டது போல் புகார்தாரரிடம் தோட்டங்களின் ஆய்வாளர் திரு.முத்துபாண்டி வாதியின் தேயிலை தோட்டத்தில் பணிபுரியும் கூலி ஆட்களுக்கு அரசு நிர்ணயம் செய்த தினக்கூலி மற்றும் ஆவணங்களை பராமரிக்கவில்லை என்பதற்காக லஞ்ச பணம் கேட்டுவந்ததும் மற்றும் அவருக்கு உறுதுணையாக அலுவலக பணியாளர் திரு.மணி என்பவர் இருந்து வந்ததும் தெரிகிறது. மேலும் புகார்தாரரின் முன் நடத்தை மற்றும் புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் தெரியவந்தது. மேலும் புகார்தாரர் ஆஜர் செய்த CD-யில் இருந்த ஆடியோ பதிவுகளை புகார்தாரரின் முன்னிலையில் கேட்டு விபரம் தெரிந்துகொண்டேன். நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்தும் CD-யில் இருந்த உரையாடல்களை கேட்டதில் இருந்தும் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பதாக தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 24.06.2019-ம் தேதி காலை 10.00 மணிக்கு உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.7/2019/AC/NI-ல் ஊழல் தடுப்பு சட்ட பிரிவுகள் 7 (a)-ன் படி மேற்படி எதிரிகள் 1. திரு.முத்துபாண்டி, தோட்டங்களின் ஆய்வாளர் மற்றும் 2) திரு.மணி, அலுவலக பணியாளர் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு:- நாள்:24.06.2019 அனுப்புநர் கே.சி.ஹரிஹரன், த/பெ சி.கே.சின்னசாமி, 4/6, கெங்கரை கிராமம், கோத்தகிரி தாலுக்கா, நீலகிரி மாவட்டம். பெறுநர் காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும்

Geethalakshmi
24/6/19

கண்காணிப்புத்துறை, நீலகிரி மாவட்டம். ஐயா, நான் மேலே சொன்ன விலாசத்தில் என் குடும்பத்துடன் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு சுமார் 6 ஏக்கர் தேயிலை தோட்டம் இருக்கிறது. எனக்கு இரண்டு மகன்கள். என்னுடைய தேயிலை தோட்டத்திற்கு அவ்வப்போது தேயிலை பறிக்க வேலை ஆட்கள் வந்து செல்வார்கள். அவர்கள் தினக்கூலி பெற்று செல்வார்கள். கடந்த 08.06.2019-ம் தேதி கோத்தகிரி காம்பாய்கடை அருகிலுள்ள தொழிலாளர் அலுவலகத்துறையிலிருந்து தோட்டங்களின் ஆய்வாளர் திரு.முத்துபாண்டி மற்றும் அவருடைய அலுவலக பணியாளர் திரு.மணி ஆகியோர் எனது தோட்டத்திற்கு அரசு வாகனத்தில் வந்து ஆய்வு செய்து, எனது தோட்டத்தில் வேலை செய்யும் கூலி ஆட்களுக்கு அரசு நிர்ணயித்துள்ள கூலி மற்றும் இதர படிகள் எதுவும் கொடுக்கவில்லை என்றும், முறையாக பதிவேடுகள் பராமரிக்கவில்லை என்றும், கூலி ஆட்களின் பெயர்களை பதிவு செய்திருத்தல் வேண்டும் என்றும் கூறினார்கள், ஆகையால் திரு.முத்துபாண்டி அவர்கள் வழக்கு தொடரப்படும் என்றும், வழக்கு தொடராமல் இருக்க ரூ.10,000/- லஞ்சமாக அவருக்கு கொடுக்க வேண்டும் என்றும், பணத்துடன் தன்னை அலுவலகத்தில் வந்து பார்க்க வேண்டும் என்றும் கூறினார். என்னிடம் அவர் எந்த விளக்கமும் கேட்கவில்லை. அவரிடம் நான் கெஞ்சி கேட்டேன் அதன் பின்னர் அவர் தனக்கு ரூ.4,000/-மாவது கொடுக்கவேண்டும் என்றும், இல்லையென்றால் வழக்கு போட்டு விடுவேன் என்றும் சொல்லிவிட்டு சென்றுவிட்டார்கள். எனது தோட்டத்தில் தினமும் வேலை கிடையாது. இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூலி ஆட்களை அழைத்துதான் தேயிலை பறிக்கவைப்பேன். ஆகையால் அவர்களது பெயர்களை பதிவு செய்ய இயலாது. மேலும் ஒவ்வொரு முறையும் வெவ்வேறு ஆட்கள் வேலைக்கு வருவார்கள். ஆகையால் நான் சென்று திரு.முத்துபாண்டி அவர்களை பார்க்கவில்லை. சுமார் 10 நாட்களுக்கு பின்னர் மேற்படி அலுவலக பணியாளர் திரு.மணி என்பவர் எனது கைபேசி எண் 9443055755-ல் அழைத்துள்ளார் நான் வீட்டில் இல்லாததால் எனது மனைவி அழைப்பை ஏற்று நான் வந்தவுடன் தகவல் கூறினார். மறுநாள் நான் மணி அவர்களை தொலைபேசியில் அழைத்தபோது அவர் தனது அதிகாரியான திரு.முத்துபாண்டி தோட்டத்தை ஆய்வு செய்து பத்து நாட்களாகியும், அலுவலகத்திற்கு வந்து தனது அதிகாரியை பார்க்கவில்லை என்றும், வழக்கு பதியாமல் இருக்க ரூ.4,000/- லஞ்சமாக கொண்டுவருமாறும் கூறினார். நான் அவர்களிடம் உடல்நிலை சரியில்லாததால் 20.06.2019-ம் தேதி லஞ்சப்பணம் ரூ.4,000/-த்துடன் அலுவலகம் வருவதாக கூறி கைப்பேசியை வைத்தேன். பின்னர் 20.06.2019-ம் தேதி என்னால் நேரில் செல்ல இயலாததால், திரு.முத்துபாண்டி

Geethalakshmi
24/6/19

அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். அதற்கு திரு.முத்துபாண்டி அவர்கள் வழக்கு பதியாமல் இருக்க மணி கூறியவாறு நடந்துக்கொள்ளுமாறு கூறி மணியிடம் போனை கொடுப்பதாகச் சொல்லி போனை கொடுத்தார். மணி என்னிடம் ரூ.4,000/-ஐ லஞ்சமாக கொடுக்குமாறும் அதை இன்று திங்கட்கிழமை மதியம் அவருடைய அலுவலகத்தில் வந்து கொடுக்குமாறும் கூறினார். எனது தோட்டத்தில் சீரான வருமானம் கிடையாது. தினந்தோரும் எனது தோட்டத்தில் வேலை கொடுக்க போதிய வேலை இல்லை. கூலி ஆட்கள் சுற்றுவட்டாரத்தில் எல்லோருடைய தோட்டத்திற்கும் அழைப்பின் பெயரில் செல்வார்கள். ஆகையால் அவர்களது பெயரை பதிவு செய்து பதிவேடுகளில் பராமரிக்க முடியாது. பின்னர் என் மீது தவறு இருக்கும்பட்சத்தில் வழக்கு போட்டிருக்கலாம். ஆனால் அவர் வழக்கு எதுவும் பதியாமல் லஞ்சம் கேட்டதால், நான் யோசித்து பார்த்து அரசாங்க வேலை செய்வதற்காக ஊதியம் பெற்றுக்கொண்டு என்னிடம் லஞ்சமாக பணம் கேட்கும் தோட்டங்களின் ஆய்வாளர் திருமுத்துபாண்டி மற்றும் அலுவலக பணியாளர் திரு.மணி ஆகிய இருவர் மீதும் லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுக்க முடிவு செய்துவிட்டு இன்று காலை (24.06.2019) இந்த மனுவை தயார் செய்து தொழிலாளர் துறை அலுவலக தோட்டங்களின் ஆய்வாளர் திரு.முத்துபாண்டி மற்றும் அலுவலக பணியாளர் திரு.மணி ஆகிய இருவர் மீதும் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் 20.06.2016-ம் தேதி தோட்டங்களின் ஆய்வாளர் திரு.முத்துபாண்டி மற்றும் அலுவலக உதவியாளர் திரு.மணி ஆகியோர் செல்போனில் என்னிடம் பேசிய உரையாடலையும் நான் பதிவிறக்கம் செய்த குறு வட்டுவையும் ஆஜர் செய்கிறேன். இப்படிக்கு ஒப்பம் (XXXX) 24.06.2019 (கே.சி.ஹரிஹரன்). Submitted: Received the above typed complaint on 24.06.2019 at 09.00 hrs and after conducting a preliminary enquiry, registered a case in V & AC, The Nilgiris Cr.No.7/2019 u/s 7(a) of PC (Amendment) Act 2018 on 24.06.2019 at 10.00 hrs. Sd (XXXX) 24.06.2019 Insp, VAC, The Nilgiris. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு மற்றும் புகார் மனுவுடன் புகார்தாரர் ஆஜர் செய்த CD ஆகியவற்றை கனம் நீதிபதி, சிறப்பு நீதிமன்றம், உதகமண்டலம் அவர்களுக்கு அனுப்பிவைத்தேன். இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டன.

Geethalakshmi
24/6/19
பி. கீதாலட்சுமி
காவல் ஆய்வாளர்
உ.த கண்காணிப்பு, நீலகிரி மாவட்டம்